**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02 ஆம் நாள் திங்கள்கிழமை

**இ.ம.எண்.02/2025**

IN

**அசல் வழக்கு எண்.353/2015**

1. சகாயராஜ்
2. இசக்கிமுத்து ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. பாலம்மாள்
2. சுப்பையா
3. பட்டாணி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது 08.01.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.தங்கமணி அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.F.X.யூஜின் அவர்கள் ஆஜராகியும், மனு, எதிருரை மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 14(3)–ன் கீழ், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பு ஆவணங்களாக ஏற்று குறியீடு செய்ய அனுமதி அளிக்கக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.02.02 17:21:44 +0530

**1) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் என்றும், மனுதாரர்கள் அசல் வழக்கை பிராது தபசில் 1 இலக்க சொத்தானது 1ம் மனுதாரருக்கு தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக்கேட்டும், அதில் அனுபவத்தை இடைஞ்சல் செய்யக்கூடாது என தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு இடையேயான ஆவணங்கள் செல்லாதது என கேட்டும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி பெற்ற தீர்ப்பும் தீர்ப்பாணையும் செல்லா நிலையது என கேட்டும், இதர பரிகாரங்களுக்காகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா அசல் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் வழக்கிற்கு தேவையான சில அவசியமான ஆவணங்களை 1ம் மனுதாரரால் தாககல் செய்ய இயலாமல் போய்விட்டது என்றும், அந்த ஆவணங்கள் 1ம் மனுதாரருக்கு தற்போது கிடைத்துள்ளது என்றும், அந்த ஆவணங்களை அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பு கூடுதல் ஆவணங்களாக தாக்கல் செய்ய அனுமதி கேட்டு இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி ஆவணங்களை வழக்கின் ஆரம்பத்தில் சேர்க்க தவறியது வேண்டும் என்றே ஏற்பட்டதல்ல, தெய்வாதீனமானதாகும் என்றும், இந்த மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்பட போவதில்லை என்றும், அல்லாத பட்சத்தில் மனுதாரர்களுக்கு அநேக கஷ்ட, நஷ்டங்கள் ஏற்படக்கூடும் என்றும், ஆகையால், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பு ஆவணங்களாக ஏற்று குறியீடு செய்ய அனுமதி அளிக்கக்கோரி இம்மனு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **2ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 1, 3 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-**

மனுதாரர்களின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரரால் மனுவுடன் தாக்கல்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.02 17:21:51 +0530

செய்யப்பட்டுள்ள 1ம் லக்க ஆதரவானது ஜெராக்ஸ் நகலாகும் என்றும், மேலும் 7ம் லக்க ஆதரவும் கலர் ஜெராக்ஸ் என்றும், 7ம் லக்க ஆதரவானது கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்டது என்பதாலும், அது உரிய அலுவலரால் வழங்கப்படாத காரணத்தாலும் சான்றாவணமாக ஏற்றுக்கொள்ள இயலாது என்றும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள 2 முதல் 6 ஆவணங்கள் குறித்து மனுதாரரே இந்நீதிமன்றத்தில் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார் என்றும், எனவே மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>**தீர்வுக்குரிய பிரச்சனை:-**</u>

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, எதிர்மனுதார்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) அசல் வழக்கானது வாதிகளால் பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை நீதிமன்றத்தில் விரைந்து தாக்கல் செய்யாமல் காலதாமதமாக தற்பொழுது அசல் வழக்கில் கூடுதல் ஆவணங்களாக ஏற்றுக்கொள்ளக்கோரி தாக்கல் செய்யப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

7) மனுதாரர்களால் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி ஆவணங்களை விரைந்து தாக்கல் செய்யாததற்கு எவ்வித விளக்கமும் மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவில் தெரிவிக்கப்படவில்லை.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.02 17:21:57 +0530

8) மேலும், இம்மனுவின் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரரால் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 1ம் லக்க ஆதரவானது ஜெராக்ஸ் நகலாகும் என்றும், மேலும் 7ம் லக்க ஆதரவும் கலர் ஜெராக்ஸ் என்றும், 7ம் லக்க ஆதரவானது கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்டது என்பதாலும், அது உரிய அலுவலரால் வழங்கப்படாத காரணத்தாலும் சான்றாவணமாக ஏற்றுக்கொள்ள இயலாது என்றும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள 2 முதல் 6 ஆவணங்கள் குறித்து மனுதாரரே இந்நீதிமன்றத்தில் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார் என இம்மனுவுக்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

9) இருப்பினும், அசல் வழக்கானது வா.சா.1ன் முதல் விசாரணை தொடர்ச்சிக்காக நிலுவையில் இருப்பதால் மனுதாரர்களால் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் இவ்வழக்கிற்கு சிறந்த நீதிமுறை தீர்மானிப்பிற்கு அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

10) ஆகையால், மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களானது நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்குட்பட்டு இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

11) எனவே, மேற்கண்ட பரிசீலனையிலிருந்து இம்மனுவானது நீதியின் நலன் கருதி நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படத்தக்கது என்று இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

**<u>12) இறுதியாக</u>**

இம்மனுவானது இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்குட்பட்டு (Subject to

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.02 17:22:04 +0530

Proof and Relevancy) ரூ.200/- (ரூபாய் இருநூறு மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 04.02.2026 ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 04.02.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.02 17:22:10 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :-**

**- இல்லை -**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.02 17:22:16 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

முு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,

I.A.No.02/2025
in
O.S.No.353/2015

உத்தரவு (Draft / Fair)
நாள் : 02.02.2026